## (DEPOSITION OF WITNES

### (Chapter XXIII Code of Criminal Procedure)
### IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : STC.396/2024 | Date: 25.07.2025 |
| Deposition of Witness for | : **பு.சா.1** | |
| Name | : **ராஜ்குமார்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை** :-

**1.** நான் திம்மங்காடு, நாகிசெட்டிபட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரியின் பூர்வீகம் திம்மங்காடு, நாகிசெட்டிபட்டி தற்பொழுது பச்சக்காட்டில் குடியிருந்து வருகிறார். எதிரி சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக பச்சக்காட்டில் குடியேறினார். என்னுடைய தாத்தாவும், எதிரியின் தாத்தாவும் அண்ணன் , தம்பி உறவுமுறை ஆகும். இரண்டுபேரின் வீட்டிற்கு ஒரே சுவர் தான் இடைவெளி என்றால் சரிதான். நான் டிப்ளமோ மெக்கானிக் படித்துள்ளேன். தற்போது தனியார் கம்பனியில் வேலை செய்துவருகிறேன். சுமார் 25 வருடமாக தனியார் நிறுவனத்தில்தான் வேலை செய்து வருகிறேன். கெரிடேஞ் கிரானைட் என்ற கம்பெனியில் வேலை செய்து வந்தேன் தற்பொழுது குளோபளர் கிரானைட் என்ற கம்பெனியில் வேலைசெய்து வருகிறேன்.

2. எதிர்மனுதாரர் ஐ.டி.ஐ. படித்துள்ளார். என்னுடைய அப்பா காலத்திலிருந்தே எதிர்மனுதாரர் குடும்பத்துடன் கொடுக்கல், வாங்கல் இருந்து வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இரு குடும்பத்தாருக்கும் இடையே

உள்ள வரவு செலவு பற்றி தெரியும் என்றும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பாவுக்கு வட்டிக்கு விடும் பழக்கம் உள்ளது என்றால் இல்லை. எதிரி லாரி வைத்து தொழில் செய்துவருகிறார். எதிரி லாரி தொழில்செய்வதற்கு ஆதரவாக எந்தவித ஆவணங்களும் நீதிமன்றத்தில் நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். நானும், எதிரியும் நண்பர்கள் என புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கும், எனக்கும் இந்த வழக்கு பரிவர்த்தனை தவிர வேறு எந்த பணப்பரிவரத்தனையும் இல்லை. எனக்கும், எதிரிக்கும் இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு நிறைய பரிவர்த்தனைகள் இருந்தது என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி லாரி தொழில் மற்றும் குடும்ப தேவைக்காக பணம் கேட்டார். எதிரி 4 , 5 லாரிகள் வைத்து தொழில்செய்து வருகிறார். தற்பொழுதும் லாரி வைத்து தொழில்செய்து வருகிறார்.

3. எதிரிக்கு லாரி தொழில்மூலம் எவ்வளவு வருமானம் வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி எவ்வளவு கேட்டார் என்றால் ஆறு லட்சம் கேட்டார் நான் ஆறு லட்சமும் கொடுத்தேன். எதிரி கேட்டு 10 நாட்கள் கழித்து நான் பணம் கொடுத்தேன். எதிரிக்கு கொடுத்த கடன்தொகையான ரூபாய் ஆறு லட்சம் நான் சீட்டு போட்டு வைத்ததிலிருந்து தொகையிலிருந்து நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். எதிரிக்கு கொடுத்த கடன் தொகையான ஆறு லட்சம் அம்மன் கோவில் சீட்டின் மூலம் ரூ. 2 லட்சம், முனியப்பன் கோவில் சீட்டின் மூலம் ரூ. ஒரு லட்சம் மீதி ரூ.3 லட்சம் எனது சேமிப்பிலிருந்து வழங்கப்பட்டது ஆகும். கோயில் சீட்டுகள் மாத சீட்டுகள் ஆகும். அம்மன் கோவில் சீட்டு அம்மாவாசை அன்று

நடக்கும். முனியப்பன் கோவில் சீட்டு மாதா மாதம் 10 ம் தேதி அன்று நடக்கும். எதிரி என்னிடம் செப்டம்பர் 2 ம் தேதி பணம் கேட்டார் நான் 10 ம் தேதி எதிரிக்கு கடன்தொகையை கொடுத்தேன். நான் கடன் கொடுத்த அன்றே காசோலை பெற்றுக்கொண்டேன். எதிரி கொடுத்த காசோலை வரும்பொழுதே நிறப்பி கொண்டுவந்து கொடுத்தார். எதிரிக்கு நான் ஞாயிற்று கிழமை பணம் கொடுத்தேன் சுமார் 2 to 3 மணியளவில் பணம் கொடுத்தேன்.

4. எதிரி என்னிடம் வெற்று காசோலை தான் கொடுத்தார் என்றால் சரிதான் காசோலை கொடுத்த அன்று கையொப்பம் மட்டும் தான் செய்துகொடுத்தார். தொகையை எதிரி நிரப்பசொன்னார் நான் நிறப்பினேன். எதிரி என்னிடம் இரண்டு காசோலைகள் கொடுத்தார். ஒரு செக் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி இன்னொரு செக் கரூர் வைஸ்யா வங்கியுடையது கொடுத்தார். எதிரி எனது தந்தையிடம் 2013 ம் வருடம் பெற்ற கடனுக்காக பிணையமாக பெற்ற காசோலையை கடன் தொகையை திருப்பி செலுத்திய பிறகும் நிறப்பி பொய் வழக்கு தாக்கல்செய்துள்ளார்.

5. எதிரி என்னிடம் உண்மையிலேயே கடன் வாங்கியிருந்தால் ஒரே வங்கியின் காசோலை தான் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பாவுக்கு வயது 77 ஆகும். எனது தந்தைக்கு வயது முதிர்வின்காரணமாக வரஇயலாது என்பதால் நான் காசோலையை நிறப்பி பொய் வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கருமாபுறத்தானூரை சேர்ந்த சக்திவேல் என்பவர் எனக்கு 5 வருடங்களாக தெரியும். அவர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் இல்லை Heritage Granite ல் வேலைக்கு செல்கிறார். ஐ.சி.ஐ.சி.ஐ. காசோலையை எதிரி எனது தந்தையிடம் கொடுத்திருந்தார் என்றாலும், கரூர் வைஸ்யா காசோலை சக்திவேலிடம் கொடுத்திருந்தார் என்றாலும் நான் இரண்டு காசோலைகளையும் தவறாக பயன்படுத்தி பொய் வழக்கு தாக்கல்செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. எனது மனைவி சந்திரா தற்பொழுது 15 வது வார்டு கவுன்சிலாராக உள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கும், எனக்கும் இடையே ஊர் பெரியோர்கள் மத்தியில் சமரசம் பேசப்பட்டது என்றால் சரியல்ல.

6. எதிரி கொங்கு கச்சியினுடைய சரவணன் என்வரின் பைபான்சில் மேலாளராக உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சரவணன் என்பவர் என்னிடம் சமரசம் பேசவில்லை. சரவணன் எனக்கு பழக்கமானவர் தான் ஆனால் பணம் சம்பந்தமாக என்னிடம் பேசவில்லை. மற்ற விசயங்கள் என்னிடம் பேசுவார். மேற்சொன்ன சரவணன் என்னிடம் வந்து எதிரியின் காசோலை சம்பந்தமாக சமரசம் பேசினார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த பணப்பரிவர்த்தனை செய்யவில்லை என்றாலும், வழக்கு காசோலை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

7. எதிரிக்கும், எனக்கும் ஏற்பட்ட பிரச்சனையால்தான் எதிரி அவர் சொந்த ஊரை விட்டு பச்சக்காட்டில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. எதிரி பச்சக்காட்டில் குடிவந்தவுடன்தான் என்னிடம் கடன்தொகையை வாங்கினார். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபிறகு பெரியோர்களால் சமாதானம் பேசப்பட்டு நான் வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வதாக உறுதி அளித்ததால்தான் எதிரி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,

Sd/-Rajkumar

Judicial Magistrate No.1,

Sankari.